# சித்தர்பாடல்களில் சமூக அறம்

**முனைவர் க.மைதிலி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

மனிதனை மாமனிதனாக்குவதில் ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களுக்குப் பெரும் பங்குண்டு. அவர்களுள் அடங்குபர்களே சித்தர்கள். அவர்கள் மக்கள் அறிவைத் தெளிவுப்படுத்தி, உள்ளுயிரின் உணர்வின் உண்மையான உயிர் உயர்வுக்கு உதாரணமாக விளங்கியவர்கள். அறியாமை அகற்றும் ஆசிரியர்களாக நோய்தீர்க்கும் மருத்துவர்களாக அறமுரைக்கும் சான்றோர்களாக அறிவியல் அறிஞர்களாகப் பொய்மையைக் களைந்திடும் புரட்சியாளர்களாகச் சித்தர்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆன்ம விடுதலையை எண்ணி செயல்பட்டாலும் சமுதாயம் சீர்பட தன்னலம் கருதாது பல தொண்டுகளைச் செய்தனர். சமுதாயக்கேடுகளை எண்ணி வருந்தினர். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கவும் போரும் பூசலும் அற்று மக்கள் அன்பாகவும் அமைதியாகவும் வாழவும் விரும்பினர். நீண்ட வரலாற்று பின்னணியை உடைய சித்தர்கள் தம் காலச் சூழலில் சமுதாய அரசியலில் ஏற்பட்ட மாற்றம் சமூக உணர்வின் அடிப்படை வடிவத்தில் மாற்றத்தை நிகழ்த்தியது. சித்தர்கள் தம் பாடல்களை எளிய மொழிநடையில் பாடல்களை இயற்றி அதன்மூலம் சமுதாய இருப்பையும் சமயங்களின் போக்கையும் நெறிப்படுத்திய பாங்கை ஆராயும் ஆய்வாக இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

### சித்தர்கள் என்போர்

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதலே தன் மனதின் ஆற்றலை ஒருமுகப்படுத்த முயன்று வருகிறான். மனதின் ஆற்றலை அகமுகமாக ஒருமுகபடுத்தி தம்முள் இறைமையைக் கண்டு அதனுடன் ஒன்றி கலந்தவர்கள் சித்தர்கள் என்றழைக்கப்படுகின்றனர். சித்தர் சித்தி பெற்றவர் சித்தத்தை உடையவர், சித்தாவது சிவன் ஆத்மசக்தியினின்று எழுவது சித்தத்தை சிவனிடம் வைத்து சிந்தனையில் மூழ்க சித்தவிகாரம் ஒடுங்கும் ஆத்மசக்தி எழும். ஆத்மசக்தி எல்லாவித சித்துக்களையும் கூட்டும் அவர்கள் செயற்கரியச் செயல்களை மேற்கொள்பவர்களாக விளங்குவர்.

தமிழ்ச் சித்தர்கள் சைவத்தோடு தொடர்புடையவர்கள் என்றே அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆனால் சித்தர்களின் போக்கை வைதீக சைவர்கள் எதிர்த்தனர். ”சமுதாயத்தில் நிழவிய

ஏற்றத்தாழ்வுகளை ஆச்சாரங்களைக் கண்டித்தவர்கள், சமய பூசல்களுக்கு எதிரானவர்கள், மதநிறுவனங்களை நிராகரித்தவர்கள், சாதிபேதங்களுக்கு எதிராகப் போராடியவர்கள் என்ற வகையில் வைதீகச் சித்தர்களை ஏற்றுக்கொள்வதில்லை. சித்தர்கள் பஞ்சமர் நிலையிலேயே நிற்பதாக ஒதுக்கினர்". (2006 :73) என தேவபேரின்பம் சித்தர்களின் நிலையைக் குறிப்பிடுகின்றார். ஆனால் சித்தர்களை சைவசமய எல்லைக்குள் சுருக்கிவிட முடியாத அளவுக்கு சித்தர்களின் பரம்பரை பெரிதாகவே உள்ளது. சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் நிலையை அடைந்தவர்கள் அனைவரும் சித்தர் ஆவார். சித்தர்கள் வெளிபடும் புறச்செயல்கள் மீது நாட்டம் கொள்ளவில்லை அவர்கள் சித்தாடம் நிலைக்கு அப்பால் உள்ள பூரண நிலையையே சித்தர்கள் அடைய விரும்பினர். சித்தர்களின் புறத்தோற்றமும் செயல்களும் வாழ்க்கை முறையும் வேறாக அமையினும் அவர்களின் சித்தம் எப்பொழுதும் அவர்களின் சிந்தையில் ஒன்றியிருக்கும் இயல்புடையது.

சித்தத்தின் பண்பட்ட நிலைக்கு ஏற்பவே மனிதனின் அகபண்புகளும் புறஞ்செயல்களும் அமையும். எனவே சித்தத்தின் இயல்பைக் கொண்டு சித்தர்களை அடையாளம் காணலாம். சித்தர் என்பது ஓய்வில்லாத உணர்வோட்டம் இவ்வுணர்வோட்டத்தின் விளைவாகவே மனிதன் உணர்கிறான், ஆசைப்படுகிறான், எண்ணுகிறான் செயல்படுகிறான். சித்தத்தில் ஏற்படுகிற அதிர்வலைகள் மனிதனின் செயல்கள் அனைத்திற்கும் காரணமாய் அமைகின்றன. சித்தத்தின் அதிர்வுகள் வலையாகி ஆன்மாவைச் சிறைப்படுத்துகின்றன. சித்தம் ஓய்ந்துவிட்டால் வலை தானாகவே கழன்றுபோகும் "ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சுத்த வித்தியா தத்துவம், ஆகிய மூன்றில் கிளைக்கும் முப்பத்தாறு தத்துவங்களும் எரிந்து விழும் அப்போது சித்தம் தெளிவடையும் திரையற்ற நீர்போல் தெளிந்த சித்தம் சிவமயமாய் இருக்கும். சித்தர்கள் என்போர் சித்தம் சிவமான சிவன் முக்தர்கள் ஆவர். சித்தம் உடையவர் "நான்" "எனது" எனும் அகப்புறப் பற்றுகள் அற்றவராய் இருப்பர். இவர்கள் எதையும் உண்டு எங்கேயும் உறங்கும் மனப்பக்குவம் உடையவர்களாக வாழ்வர்" (2003:25) என க.நாராயணன் எடுத்துரைக்கின்றார். சித்தர்கள் உலகியலை வெறுக்காமலும் உடலை வலிந்து வருத்தாமலும் யோக, ஞான நெறிகளால் சித்த ஒழுக்கமும் தெளிவும் பெற்றுச் சிந்தை தெளிவாக ப்பவசூஷ

**சமுதாய சமநிலை**

இறையுணர்வை அடிப்படையாகக் கொண்டுதான் பல்வேறு மதங்கள் உலகில் தோன்றின. மதங்கள் தோன்றிய உலகப் பகுதிகளில் சூழ்நிலைகளுக்கேற்ப மதச் சடங்குகள் வகுக்கப்பட்டன. நாளடைவில் அச்சடங்குகளே சமயங்களின் சாரம் என்று மக்கள் கருதத் தலைப்பட்டனர். சடங்குகளின் வேறுபாட்டால் சமயங்கள் மாறுபட்டன. மாறுபட்ட சமயத்தினரிடையே போட்டியும் பூசலும் தோன்றின. இந்தப் பின்னணியில்தான் காடு-மலைகளிலிருந்து கொண்டு சாமானிய மக்களின் மொழியிலேயே சித்தர்கள் கூட்டங்களாகச் செயல்பட்டனர். "சமயத்துறையில் சித்தர்கள் பலரும் புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்து அடிநிலை மக்கள் புரட்சிக்கு வித்திட்டார்கள் உண்மையில் சமயத்துறையில் சித்தர்கள் வெளிக்காட்டிய எதிர்ப்பு சமூகத்துறையிலிருந்த முரண்பாட்டின் விளைவேயாம்" (1978:190) என க.கைலாசபதி சித்தர்கள் காட்டிய சமயகாழ்ப்புணர்ச்சிக்குச் சமுதாய நிலையே முக்கியக் காரணமாகயிருந்தது என்கிறார்.

சமயச் சண்டைகளும் இறைவழிபாட்டில் மலிந்துவிட்ட கண்மூடிப் பழக்கங்களும் சமுதாயச் சிந்தனையை ஏற்படுத்தின. சமயச் சண்டைகளைக் களைந்து சமூக ஒற்றுமையை ஏற்படுத்த முனைந்தனர் சித்தர்கள். சித்தர்கள் கடினமான மனித உழைப்பை வலியுறுத்தினர்.

**தெரியாது என்றலைந்தால் தெரியுமோதான்**
**தேடியல்லோ ஆராய்ந்து பாக்க வேணும்**
**அறியாத மூடருக்கு அறியப் போமோ**

**அன்னத்தை திரட்டி மெள்ள வாய்க்கீந்தாலும்**
**குறியாக முழங்குதற்கு மாட்டார் மூடர்**
**குறிப்பாக இதுவல்லா லென்ன செய்வேன்**
**மறைவான அறிவொன்று மில்லை, இல்லை**
**மட்டாத மூடருக்கு அறிவு தானே(பா.39)**

எனும் பாடலில் அறிவு, தேடலாலும் முயற்சியாலும் ஆராய்ச்சியாலும் வளரும் என்றும் மனிதன் அறியவொண்ணாத மறைவான அறிவொன்றும் இல்லை என வலியுறுத்தினர். வேதங்கள் உபநிடதங்களையும் மறைவான அறிவென்று உயர் சாதியினர் போற்றிய காலத்தில் அப்படியொரு மறைவான அறிவு என ஒன்றுமில்லை எனத் தெளிவுப்படுத்தினர். அறிவு என்பது உழைப்பால் விளைவது என்று உரைக்கிறது. இவ்வாறு உண்மை அறிவால் மெய்ப்பொருளைத் தேடித் தெளிவுமாறு சட்டைமுனியார் தம் பாடலில் கூறுகிறார்.

**சமயமெல்லாஞ் சக்தியுண்டு சிவமுமுண்டு**
**சண்டாளர் பிரித்தல்லோ தள்ளினார்கள்**
**சமயமெல்லாம் வேதாந்தசித் தாந்தமுண்டு**
**சாதகத்தைப் பாராமற் றயங்கினார்கள்**
**சமயமெல்லாம் நாதமுண்டு விந்துமுண்டு**
**காக்காமற் கெட்டார்க ளுலகத்தோர்கள்**
**சமயமெல்லாம் அம்பரமாம் ஞானமுண்டு**
**தாயைவிட்ட பாவத்தால் தவறிப்போச்சே (பா.24)**

என்பதில் சமயப் பொதுமையும் உண்மையும் பேசப்படுதல் குறிப்பிடத்தக்கதாகும்.

உலகில் பல சமயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தின் கொள்கையானது "அன்பாயிரு" என்பதையே ஆணிவேராகக் கொண்டுள்ளது. காலப்போக்கில் சமயத் தலைவர்களின் முனைப்பாலும் தன்னலப்போக்காலும் சமயங்களுக்கிடையே வெறுப்புணர்ச்சியும் காழ்ப்புணர்ச்சியும் தோன்றி வளர்ந்தன. சமயதன்னலக்காரர்கள் பெருகப்பெருக மக்களிடையே பிளவுகள் பெருகின. வழிபாட்டுத் தெய்வங்களின் எண்ணிக்கை பெருகிற்று. ஒருவர் வழிபாட்டு முறையிலிருந்து மற்றவர்கள் வழிபாட்டை வேறுபடுத்த வேண்டும் என்பதால் வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் பெருமளவில் வளர்ந்தன. இதனால் சமுதாயம் பல பிரிவுகளாகச் சிதறுண்டது. இத்தகைய சமயப்பற்றால் சமயநெறிகளால் சமுதாய வாழ்க்கைமுறையில் சமுதாயப் பூசல்களே அதிகமாயின. தன்னலக்காரர்களின் சதியைப் புரிந்துகொள்ள முடியாதவகையில் மக்களிடையே அறியாமை மண்டிக்கிடந்தது. மக்களின் அறியாமையைப்போக்கி அவர்களை ஒன்றுபடுத்தச் சித்தர்கள் முனைந்தனர்.

**எவர்எவர்கள் எப்படிக்கண்டு எந்தப்படி நினைத்தார்**
**அவர் அவர்க்கு அப்படி நின்றான் என்பதெக் காலம் (பா:227)**

என்ற பத்திரக்கிரியாரின் ஏக்கப்பெருமூச்சு சமுதாயத்தில் நிலவிய சமயச் சச்சரவுகளை எண்ணி நொந்துகொள்ளும் தன்மையைக் காட்டுகிறது. சித்தர்கள் எதிர்பார்க்கும் அறிவுத் தெளிவு மக்களிடையே ஏற்பட்டுவிட்டால் சமயச்சண்டைகள் மறைந்து மனித குலத்தை முழுமையாக ஒருங்கிணைக்கும் அன்பு பெருகும்.

**"அன்பில் இறைவனை யாம் அறிவோம்"**

என்கிறார் திருமூலர். இறைவன் என்பவன் வேறு எதுவாகவும் இல்லை அன்பாகவே இருக்கிறார். இறைவனை அடைய முதன்மையாக வேண்டப்பெறுவது அன்பு. அன்பு இல்லாதவர்கள் முத்திப் பெறுவதே இல்லை. கடுந்தவமும் அன்பு இல்லாவிட்டால் பலிக்காது. இதனை பாம்பாட்டிச்சித்தர்

**எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முத்தி**
**எய்துவது தொல்லுலகில் இல்லை**

எனும் பாடலில் அன்பாயிருத்தலே இறைவனைக்காணும் வழியாகும்.

**சாதி எதிர்ப்பு**

சாதியின் பெயராலும் சமய விளக்கங்களாளும் மக்களில் பலர் இழிக்கப்படுவதையும் சிலர் உயர்த்தப்படுவதையும் கண்டு பொங்கியெழுந்தோருள் குறிப்பிடத்தக்கவர்கள் சித்தர்கள். சமய வேற்றுமையும் சாதிவேற்றுமையும் பாராட்டுவோர் சமய வெறி கொண்டவர்களே ஆவார்கள். உண்மைநெறியை உணராதவர்களை

**சமயபேதம் பலவான சாதிபேதங்கள்**
**சகத்தோர்க்கே அல்லாதுசற் சாதுக்களுக்கோ (பா:99)**

என்ற கேள்வியை முன்வைக்கிறார் பாம்பாட்டிசித்தர். மேலும் சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம் என வன்மையாகக் கண்டிக்கிறார்.

**சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்**
**சந்தை வெளியினிலே கோவை நாட்டுவோம்**
**வீதிப் பிரிவினிலே விளையாடிமுவோம்**
**வேண்டாத மனையினில் உறவு செய்வோம் (பா:123)**

எனும் வரிகளில் குறிப்பிடுகின்றார்.

சமுதாய நலவாழ்விற்கும் ஒன்றுபட்டு வாழும் ஒற்றுமை உணர்வுக்கும் என அமைக்கப்பட்ட சமுதாயப் பாகுப்பாடு, காலப்போக்கில் சமுதாயத்தைத் துண்டாடிச் சிதறவைத்துவிட்டது. காலங்காலமாகப் புனையப்பட்ட கற்பனை விளக்கங்களும் உண்மையை ஆழப் புதைத்துவிட்டன. தீண்டாமை, இழிசாதி என்பன போன்ற பொய்மைகள் வளர்ந்தன. மனிதனின் அடிப்படையான உடலமைப்பும், எலும்பு, தசை, நரம்புமண்டலங்களின் சிறப்பமைப்பும் இயக்கமும் குருதியோட்டமும் மூச்சோட்டமும் அனைத்துச் சாதியினருக்கும் ஒரே மாதிரியே உள்ளன.

சாதிவேறுபாட்டிற்கேற்ப இவற்றின் எண்ணிக்கையும் இயக்கமும் வேறுபடுவதில்லை. இதனைச் சிவவாக்கியார்

**பறச்சியாவ தேதடா? பனத்தியாவ தேதடா**
**பறச்சி போகம் வேறதொ பனத்தி போகம் வேறதோ (பா:35)**

என வினாத் தொடுகிறார். மேலும்,

**சாதியாவது ஏதடா? சலம்திரண்ட நீரெல்லாம்**
**பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ**
**சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ (பா:9)**

எனும் சிவவாக்கியார் பாடலில் மக்கள் அனைவரும் சமமானவர் என்கிறார். மனிதன் இனம் பிரிப்பது சாதிவேற்றுமை பாராட்டுவது அறிவீனம், இயற்கைக்கு மாறானது என வலியுறுத்துகிறார் ஞானவெட்டியான்

**சக்தியுடை பூசைசெய்யும் சுந்தரரே என்மனையில்**
**சத்தியை நீர் சேர்ந்தால் அறியாதோ கர்ப்பமோ?**

என வினவுகிறார். தீமை செய்யாமல் அறநெறியில் நின்று வாழ்வோர் மக்களுள் வேற்றுமை பாராட்டமாட்டார்கள் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பிரிவினைக் கொள்ளார். மக்கள் அனைவரும் சமம் என்று நினைப்பர் இதனை அகப்பேய்ச்சித்தர்

**சாதிபேதம் இல்லை - அகப்பேய்**
**தானாகி நின்றவர்க்கே (பா:68)**

சாதிய சித்தாந்தங்களையும் செயல்பாட்டையும் முழுமூச்சாய் எதிர்ப்பது என்பதையே குறிக்கோளாய்க் கொண்டிருந்தனர் சித்தர்கள் என்பதை அவர்களின் பாடல்களால் அறியலாம்.

**தனிமனித வாழ்வறம்**

தனிமனிதன் நடத்தும் ஒழுக்கமுள்ள வாழ்க்கை சமுதாய ஒழுங்கை நாளும் வளர்த்து வலிமையுறச் செய்யும். தனிமனித வாழ்வின் ஒழுக்கக்கேடுகள் காலப்போக்கில் சமுதாய

ஒழுக்கத்தைக் கெடுத்துவிடும், ஒழுக்கக்கேடுகள் அனைத்திற்கும் முழுமுதற் காரணமாக இருப்பது ஆசையும் செருக்கும். எல்லாம் தனக்கே உடைமையாதல் வேண்டும் என்ற பேராசையே ஒழுக்கக்கேடுகளின் ஊற்றாக இருக்கிறது. எந்த உடைமையும் நிலைத்திருக்காது என்ற உண்மையை உணர்ந்த மனிதனிடம் பேராசை எழாது. நிலையாமையைக் குறித்த பட்டினத்தார்

**பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லை; பிறந்துமண்மேல்**
**இறக்கும்பொழுது கொடுபோவ தில்லை - இடைநடுவில்**
**இறக்கும் குலாமருக்குஎன்சொல்லுவேன்? (திருஏகம்பமாலை: பா:7)**

என்பதில் பிறக்கும்போது மனிதன் இம்மண்ணுலகிற்கு எதையும் கொண்டு வருவதுமில்லை இறக்கும்பொழுது எதையும் இவ்வுலகிலிருந்து கொண்டுபோவதுமில்லை இவ்வுண்மையை உணர்ந்து இடையிடையே வந்து போகும் இப்பொருளைப் பிறருக்குக் கொடுத்து மகிழாமல் வெறுமனே இறந்து போவாரின் இயல்பைக் கடிந்துரைக்கிறார்.

மனத்தூய்மையே புறத்தூய்மை அனைத்திற்கும் மூலம். மனத்துக்கண் மாசிலனாக இருப்பதே அறம் என்பது வள்ளுவர் வாக்கு. பாவம் செய்யாதிரு மனமே என கடுவெளிச்சித்தர் மனதிற்கு அறவுரை சொல்கிறார். பழிவாங்கும் உணர்வு விலங்குத் தன்மையை வெளிப்படுத்தும். தீங்கு செய்தாரையும் மன்னிப்பது சிறந்த மனிதத் பண்பாகும். இதனைக் கடுவெளிச்சித்தர்,

**வைத்தோரைக் கூடவையாதே இந்த**
**வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே**
**வெய்ய வினைகள் செய்யாதே (பா:25)**

எனும் பாடலடி மூலம் அறியலாம்.

சேர்த்து வைத்த பொருள்களும் தேடிகொண்ட உறவுகளும் நாம் இவ்வுலகைவிட்டு போகும் நாளில் உடன்வாரா. நம்மைப் பற்றி பிறர் கூறும் வாழ்த்துரைகளும் வசைமொழிகளுமே நாம் செல்லும் இவ்வுலகில் நாம் வாழ்ந்த வாழ்வை எடுத்துக்கூறும் உடல் அழிய நேரினும் உயிர் பிரிய நேரினும் பிறருக்குத் தீங்கு செய்து பாவி என்ற பெயர் பெறக்கூடாது. தனிமனித முயற்சி சமுதாய அமைதிக்கும் நல்வாழ்விற்கும் உறுதுணையாகும்

**முடிபாக**

தனிமனித வாழ்வையும் சமுதாய அமைப்பையும் சமயங்களின் போக்கையும் நெறிப்படுத்தி அமைதி பொங்கும் சமநிலைச் சமுதாயம் காணமுற்பட்டனர் சித்தர்கள். உலகம் சிறக்க தன்மையாக வேண்டப்பெறுவது அன்பு, மெய்யான அன்பு மனத்தின் ஒரு நிலையான நடுநிலைத்தன்மையுடையது. எல்லாரையும் இணைத்து எல்லாரிடமும் ஊடுருவிப் பார்க்கின்ற உள்ளத்திலிருந்து உழும் உந்துவிசைதான் மெய்யான அன்பு. வாழ்விற்குரிய ஆற்றலைத் தருகின்ற அகத்திறனே சித்தர்கள் கூறும் அன்பு. இத்தகைய அன்பு பெருகினால் சமூகத்தில் மக்களைப் பிரித்து ஆளும் சமயப்பேதங்களும் சாதியப்பேதங்களும் ஆகிய மாயையை விரட்ட முடியும்; சீர்மிகு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**துணை நூல்கள்**

1. ஆறு. இராமநாதன்(ப.ஆ) சித்தர் பாடல்கள், பிரேமாபிரசுரம், சென்னை, 2004.
2. முனைவர் க.நாராயணன், சித்தர் தத்துவம், மாரி பதிப்பகம் புதுச்சேரி, 2003.
3. க.கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1978.
4. தேவ. பேரின்பம், தமிழர் தத்துவம், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் லிட், சென்னை, 2001.